# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை பற்றிய குறிப்புகள்.

**37/2023**

---



மாணிக்கம்.இளங்கோ
**(BEd,MEd)**
தி/மூ/பட்டித்திடல் ம.வித்...
மூதூர்.

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

**37/2023**

---------------------------------

அறிமுகம்

----------------------

தாபனவிதிக் கோவையின் **XII** ஆம் அத்தியாயத்தின் **24**ஆம் வாசகத்தின்
மூலம் ஆசிரியர்களின் விடுப்பு விதிமுறைகளுக்கு மேலதிகமாம கல்வி அமைச்சின்
அவ்வப்போது வெளியான சுற்றறிக்கைகளைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும்
அறிவுரைகள்.

மாணிக்கம்.இளங்கோ
**(BEd.MEd)**

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை
## 37/2023

---

### விடுப்பு அனுமதி பெறல்

---

விடுப்பு பெறுவதற்கு முன்னர் உத்தியோகபூர்வ அனுமதியைப் பெறவேண்டும்.
முன்கூட்டியே அனுமதியைப் பெறமுடியாத சந்தர்ப்பத்தில் முறையாக அறிவித்து உரிய காலத்திற்குள் அனுமதியைப் பெறவேண்டும்.
முறையாக அனுமதி பெறாத ஆசிரியர்களைப் பணிநீக்கம் செய்வது தொடர்பான நடவடிக்கைகளுக்காக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
(BEd.MEd)

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

## 37/2023

----------------------------------

## சம்பளமற்ற லீவு தொடர்பான நடவடிக்கை

-------------------------------

சம்பளமற்ற லீவு தொடர்பான பணத்தை உரிய ஆசிரியரிடமிருந்து மீளப் பெறுதலுக்கு ஏதுவாக விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வலயக்கல்விப் பணிப்பாளரால் பணத்தைத் தாமதமின்றி மீளப்பெறுதல் தொடர்பாக அதிபர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
(BEd.MEd)

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

## 37/2023

---

## முன்னறிப்பு இன்றி சமூகமளிக்காதிருத்தல்

---

சேவைக்கு சமூகம் தராத ஆசிரியர்களின் கடமைத்தழுவல்
சம்பந்தமான பொருத்தமான ஏற்பாடுகளை
அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்.
ஆசிரியர்கள் முன்னறிவுப்பின்றியும்,நியாயமான காரணம்
மற்றும் அனுமதி பெறாமல் பணிக்கு சமூகமளிக்கவில்லை
என்றால்
பணியை விட்டு வெளியேறியவராகக் கருதப்படுவர்.
என்பதனை ஆசிரியர் குழாமிற்கு அதிபர் அறிவிக்க வேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
(BEd.MEd)

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

# 37/2023

---

## குறுகிய லீவு

---

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் **1** மணி நேரத்திற்கு மேற்படாமல் மாதத்திற்கு
இரண்டு சந்தர்ப்பங்களுக்கு மாத்திரம் குறுகிய லீவை அனுமதிக்க முடியும்.

குறுகிய லீவு பதிவதற்கென தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் பதிவு செய்து அதிபரினால் அங்கீகரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாணிக்கம்.இளங்கோ**
**(BEd.MEd)**

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

**37/2023**

---------------------------------

தாமத வருகை

வரவை உறுதிப்படுத்தல்.

---------------------

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு **(7.30)** முன் ஆசிரியர்கள்
பாடசாலைக்கு சமூகம் தர வேண்டும்.
பாடசாலை முடிவடையும் நேரம் வரை கடமையில் ஈடுபடுவதை உறுதிசெய்ய வேண்டும்.
வரவுப் பதிவேட்டில் உள்வருகை, வெளிச்செல்லல் நேரத்தை கையொப்பமிட்டு பதிவு செய்ய வேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
**(BEd.MEd)**

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை
# 37/2023

--------------------------------

## தாமத வருகை
## வரவுப் பதிவேட்டைக் கையாளல்.

------------------------------

பாடசாலை ஆரம்பிக்கும் **(7.30)** நேரத்திற்குப் பின்னரான **15** நிமிடங்களில்**(7.45)** வரவுப் பதிவேட்டில் சிவப்புக் கோடிடல் வேண்டும்.

**03** வேலை நாட்களுக்கு அரை மணித்தியாலத்திற்குக் குறைவாக வந்தால். மூன்றாவது வருகை நாள் அரைநாள் விடுமுறையாகக் கருத வேண்டும்.

ஒருமாதத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் தாமத வருகை அனுமதிக்கப்படும்.

மாணிக்கம்.இளங்கோ
(BEd.MEd)

# ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை
## 37/2023

---

தாமத வருகை
வரவுப் பதிவேட்டைக் கையாளல்.

---

மாதத்தில் ஏனைய மூன்றாவது சந்தர்ப்பத்திலிருந்து அம்மாதத்தில் வரும் ஏனைய தாமத வருகைகள் அரைநாள் லீவாகப் பதியப்படும்.

பாடசாலை தொடங்கிய **(7.30)** நேரத்திற்கு மேலதிகமாக வரும் சந்தர்ப்பங்கள்
அரைநாள் லீவாகப் பதியப்படும்

**மாணிக்கம்.இளங்கோ**
**(BEd.MEd)**

## ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

**37/2023**

**--------------------------------**

### தொடர்ச்சியான தாமத வருகை

**--------------------**

தொடர்ச்சியாக தாமதமாக வரும் ஆசிரியர்கள் தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாக. சுயவிபரக் கோவையில் பதிவு செய்வதற்கு வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கையிட வேண்டும்.

## ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும் தாமத வருகை

**37/2023**

---

### அரைநாள் லீவு அனுமதி பெறல்.

---

அரைநாள் லீவு பெறுவதற்கு குறைந்த பட்சம் பாடசாலை நேரத்துள் குறைந்தது அரைவாசி அல்லது இரண்டரை மணித்தியாலங்கள் இந்த இரண்டில் அதிகமான நேரம் பணியாற்ற வேண்டும்.

ஆசிரியர்களுக்கான விடுப்பு மற்றும்
தாமத வருகை
**37/2023**

---

தாமத வருகை கணக்கிடல்
(உதாரணம்)

---

| | | |
|---|---|---|
| **01** | **06-02.2024** | **7.32** தாமத வருகை |
| **02** | **12-02-2024** | **7.40** தாமத வருகை |
| **03** | **19-02-2024** | **7.32** அரைநாள் லீவு |
| **04** | **22.02.2024** | **7.35** அரைநாள் லீவு |